# TACTV
# தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

(தமிழக அரசு நிறுவனம்)

நிர்வாக அலுவலகம் : எண்: 34(123), தாகா டவர்ஸ், 3வது மாடி, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை - 600 008
தொலைபேசி : 044 - 28432911 நகல் : 044 - 28432913. CIN: U64204TN2007SGC064958 மின்னஞ்சல் : tactv@tactv.in


**TAMIL NADU ARASU CABLE TV CORPORATION LTD.**
**REGISTRATION CERTIFICATE**
**M/S.KING 24x7 (Tamil News Cable TV)**

செ.மு.ஆணை.எண். B3/1544579/2021 நாள்: 07.02.2022

| | | |
|---|---|---|
| பொருள் | தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் – நாமக்கல் மாவட்டம் – நாமக்கல், பரமத்திவேலூர், இராசிபுரம், குமாரபாளையம் மற்றும் திருச்செங்கோடு ஆகிய Feeding Point – திரு.B.எழிலரசு என்பவர் டிவி KING 24X7 News என்ற தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல் நடத்துவதற்கு தற்காலிக பதிவு எண் கோரிய மனு பெறப்பட்டது – தற்காலிக பதிவு எண். DPLCNMK105 (நாமக்கல்), DPLCNMK211 (இராசிபுரம்), DPLCNMK313 (திருச்செங்கோடு), DPLCNMK415 (பரமத்திவேலூர்), DPLCNMK507 (குமாரபாளையம்) வழங்கி உத்தரவிடப்படுகிறது. | |
| பார்வை | 1. | திரு.B.எழிலரசு என்பவரது ஆன்லைன் விண்ணப்பம். நாள். 08.09.2021 |
| | 2. | சம்மந்தப்பட்ட ஆவணங்கள். |

*****************

ஆணை:

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், போலீஸ் லைன் விரிவு, எண்.30, என்ற முகவரியைச் சேர்ந்த திரு.B.எழிலரசு என்பவராகிய தாங்கள் நாமக்கல் மாவட்டம், நாமக்கல், பரமத்திவேலூர், இராசிபுரம், குமாரபாளையம் மற்றும் திருச்செங்கோடு ஆகிய Feeding Point மூலம் KING 24X7 News என்ற தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல் ஒளிபரப்பு செய்திட ஆன்லைன் மூலம் தங்களால் அளிக்கப்பட்ட விண்ணப்பம் ஏற்கப்பட்டு ஆவணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு தற்காலிக பதிவு எண். DPLCNMK105 (நாமக்கல்), DPLCNMK211 (இராசிபுரம்), DPLCNMK313 (திருச்செங்கோடு), DPLCNMK415 (பரமத்திவேலூர்), DPLCNMK507 (குமாரபாளையம்) வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. இந்த தற்காலிக ஒதுக்கீடு ஆணையை எந்த நேரத்திலும், இரத்து செய்ய அனைத்து உரிமைகளையும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் பெற்றுள்ளது.
2. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் வழங்கப்பட்ட இந்த தற்காலிக உரிம ஆணை பெறப்பட்ட 7 தினங்களுக்குள், தங்களது தனியார் உள்ளூர்

தொலைக்காட்சி சேனலை துவங்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் எந்தவிதமான முன்னறிவிப்பும் இன்றி தங்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக உரிம ஆணை இரத்து செய்யப்படுவதோடு, தாங்கள் செலுத்தியுள்ள முன்வைப்புத்தொகை முடக்கம் (Forfeit) செய்யப்படும்.

3. தற்காலிக பதிவு பெற்ற தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்படும்போது, தங்கள் சேனலின் பெயர்(Logo) ஏதாவது ஒரு மூலையில் தெளிவாக காண்பிக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் உரிய உத்தரவு பெற்ற பின்னரே தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனலின் பெயர் மற்றும் சின்னத்தை (Logo) மாற்றி ஒளிபரப்பு செய்ய வேண்டும். தவறும்பட்சத்தில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
4. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் நிர்ணயித்த மாதாந்திர கேரேஜ் தொகை நடப்பு மாதத்தில் செயலாக்கத்தில் இருந்த STB எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதி மாதம் 1ம் தேதி, கேட்புத் தொகையாக நிர்ணயம் செய்யப்படும். மேலும், நடைமுறை சட்டத்திற்குட்பட்டு சேவை வரியையும்Online மூலம் மட்டுமே செலுத்த வேண்டும்.
5. தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல் தனது மாதாந்திர கேரேஜ் கட்டணத் தொகையை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு அடுத்துவரும் மாதம் 5ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும், தவறும்பட்சத்தில் முன்வைப்பு தொகை பிடித்தம் செய்யப்பட்டு, தங்கள் சேனலின் ஒளிபரப்பு நிறுத்தம் செய்யப்படும்.
6. காப்புரிமை சட்டம் 1957 (Copy Rights Act 1957) மற்றும் ஒளிப்பதிவு சட்டம் 1952 (Cinematography Act 1952) ஆகிய சட்டங்களில் உள்ள நெறிமுறைகளை மீறாமல், தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல், காப்புரிமை அனுமதி பெற்று நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப வேண்டும். காப்புரிமை அனுமதி பெறுவதற்காக, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் எந்த ஒரு தனி நபரையோ அல்லது அமைப்பையோ நியமிக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல், நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு பிற நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதில், இந்நிறுவனம் எந்தவிதத்திலும், ஆலோசனை வழங்கவோ, பொறுப்பேற்றுக் கொள்ளவோ, உத்திரவாதம் அளிக்கவோ இயலாது. காப்புரிமை அனுமதி பெறுவதற்காக தனியார் நிறுவனங்களுடன் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல் ஏதாவது ஒரு வழியை பின்பற்றி ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். காப்புரிமை மீறல் தொடர்பான கருத்து வேறுபாடு ஏற்பட்டால், இப்பிரச்சனையை அவர்களே தீர்த்துக் கொள்ள வேண்டும். இதில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது.
7. செய்திகள் அல்லது நடப்பு விவகாரங்கள் போன்றவற்றை ஒளிபரப்புவதை தவிர்க்க வேண்டும்.
8. தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல் நிகழ்ச்சிகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்பான செயல் விதிகளை (Programme Code and Advertisement Code) பின்பற்றி சட்டத்திற்கு உட்பட்டு செயல்பட வேண்டும்.
9. தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல், தனது வியாபாரத்தை

அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் பெயரை பயன்படுத்தக் கூடாது.

10. தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல் தெளிவான சிக்னலை வழங்கி சிறப்பாக சேவை செய்ய வேண்டும். மேலும், நுகர்வோருக்கு வழங்கும் சேவையில் குறையிருப்பின் அதற்கு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் எவ்வகையிலும் பொறுப்பேற்காது.
11. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் விதிகளை மீறுதல் அறிவு சார் சொத்துரிமை குந்தகம் ஏற்படுத்துதல் அல்லது வர்த்தக குறிகள் (Trade Mark) தொடர்பான விதிகளை மீறுகின்ற செயலிலோ அல்லது இது தொடர்பாக மற்றவர்களை தூண்டுகின்ற செயலிலோ, தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல் ஈடுபடக்கூடாது.
12. நடைமுறையில் உள்ள சட்டங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளையும், விதித் தொகுப்புகளையும், விதிமுறைகள், அறிவிக்கைகள், சுற்றறிக்கைகள், வழிகாட்டுதல்கள், ஆணைகள், அறிவுரைகள் போன்றவற்றை மீறாமல் அவைகளை பின்பற்றி தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல் செயல்பட வேண்டும்.
13. இதில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தும் சரியாக பின்பற்றப்படுகிறதா என்பதனை ஆய்வு செய்ய வரும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அலுவலர்களுக்கு தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல் உரிமையாளர் முழு ஒத்துழைப்பு தர வேண்டும்.
14. கேபிள் டிவி ஒழுங்குமுறை சட்டம், 1995, முத்திரை மற்றும் பெயர் (தடுப்பு மற்றும் முறையற்ற பயன்பாடு) சட்டம் 1950, ஒளிப்பதிவு சட்டம் 1952, தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் 1955, தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள் 1957, பரிசு போட்டிகள் சட்டம் 1955, காப்புரிமை சட்டம் 1957, வர்த்தகம் மற்றும் பொருட்கள் குறிகள் சட்டம் 1958, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986, போட்டி சட்டம் 2002 போன்ற சட்டங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகள் மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களில் உள்ள நெறிமுறைகளுக்கு மாறாக எந்த செயலிலும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல் உரிமையாளர் ஈடுபடக்கூடாது.
15. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம் ஒரு நபரது பெயரில் வழங்கப்பட்ட தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல் வேறு நபரது பெயர்களில் மாற்ற இயலாது. மேலும், இந்நிறுவனத்திற்கு சொந்தமான வலையமைப்பை (Network) தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல் உரிமையாளர் முழுமையாகவோ அல்லது சில பகுதியாகவோ அதனை அகற்றவோ விற்கவோ, உரிமை மாற்றவோ, அடமானம் வைக்கவோ, இடம் மாற்றம் செய்யவோ, உள்குத்தகைக்கு விடவோ அல்லது வில்லங்கம் ஏற்படுத்தவோ கூடாது. மீறி செயல்பட்டால், சட்டத்தினை மீறிய செயலாகக் கருதப்பட்டு, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
16. இந்த தற்காலிக ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளையோ அல்லது நடைமுறை சட்டங்களையோ மீறி தவறு செய்யும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனலுக்கு இந்நிறுவனத்தால் வழங்கப்படும் ஒளிபரப்பை

தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக நிறுத்தம் செய்வதற்கு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு அதிகாரம் உள்ளது. மேலும், ஒளிபரப்பு நிறுத்தம் செய்யும் போது சந்தாதாரர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது.

17. தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல், சட்டத்துக்கு உட்பட்டு ஏதாவது ஒரு காரணத்தினால் தங்களுடைய சேவையை தொடர்ந்து செயல்படுத்த இயலவில்லை என்று கருதினால், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு எழுத்து மூலமாக 7 நாட்கள் கால அவகாசத்துடன் தெரிவிக்க வேண்டும். மேலும், தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல் உரிமையாளர் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை முழுவதுமாக செலுத்தியிருக்க வேண்டும். நிலுவைத்தொகை செலுத்தாத நிலையில் முன்வைப்புத்தொகையில் நேர் செய்து கணக்கு முடிக்கப்படும்.
18. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கும், தங்கள் உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனத்திற்கும் ஏற்படும் அனைத்து பிரச்சனைகளும் வேறுபாடுகளும் சென்னை உயர்நீதிமன்ற ஆழ்வரை வரம்பிற்கு உட்பட்டதாகும். வேறு எந்த நீதிமன்றத்திற்கும் ஆழ்வரை வரம்பு கிடையாது.
19. தாங்கள் தெரிவித்துள்ள தகவல் தவறானது எனக் கண்டறியப்பட்டால் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த தற்காலிக பதிவு இரத்து செய்யப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
20. வருமான வரி, சரக்கு மற்றும் சேவை வரி உள்ளிட்ட இனங்களை முறையாக செலுத்துதல் வேண்டும்.

ஒம்/-
மேலாண்மை இயக்குநர்

பெறுநர்
திரு.B.எழிலரசு,
எண்.30, போலீஸ் லைன் விரிவு,
இராசிபுரம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம் - 637408.
செல். 9791262629

நகல்
1. தனி வட்டாட்சியர் / மாவட்ட துணை மேலாளர்,
   தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்,
   நாமக்கல் மாவட்டம்.
2. டிஜிட்டல் சிக்னல் விநியோகஸ்தகர்,
   தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்,
   நாமக்கல் மாவட்டம்.

//உ.ந.உ.ப//

09.02.22

துணை ஆட்சியர்

7/2/22